1st November 1962]

(*b*) No, Sir.

(*c*) Rules have to be framed under Sections 3, 4, 5, 9, 10 and 14 of the Act. Action has been taken to frame suitable rules under these sections. As soon as the rules are framed and issued, action will be taken to publish the lists.

* டாக்டர் அ. சிதம்பரநாதன் : ஐயா, சில நகராட்சி மன்றங்கள் இந்த விவரங்களைத் தெரிவித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை எவை ?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : மொத்தம் நான்கு முனிசிபாலிட்டிகள். விழுப்புரம், ஆம்பூர், அரக்கோணம், வாலாஜாபாத்.

டாக்டர் அ. சிதம்பரநாதன் : மற்ற நகராட்சி மன்றங்கள் விரைவில் இந்த விவரங்களைக் குறித்து அனுப்புமாறு அரசாங்கம் விரைவுபடுத்துமா ?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : ஏற்கனவே துரிதப்படுத்தியிருக்கிறது.

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர் : ஏன் இவ்வளவு நாளாகிறது ? நாங்கள் அதைத் தீர்மானம் செய்யும்போது விரைவில் செய்யவேண்டுமென்று இருந்தது. ஏன் இவ்வளவு நாளாகிறது ?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : பரிசீலனை செய்து சொல்கிறேன்.

* 219. *Q.*—DR. A. CHIDAMBARANATHAN : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether a list of parks, play-fields and open-spaces in the City of Madras has been prepared by the Corporation of Madras and submitted to Government for approval;

(*b*) whether the Government have published any such list ; and

(*c*) if not, why not ?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) & (*b*) No, Sir.

(*c*) The Commissioner, Corporation of Madras, was requested to take preliminary steps for collection of particulars necessary for the preparation of lists by the due date under Section 3 (1) of the Act. The Government have also taken action to frame suitable rules under sections 3, 4, 5, 9, 10 and 14 of the Act. As soon as the rules are framed, action will be taken to publish the list.

* டாக்டர் அ. சிதம்பரநாதன் : ஐயா, இதுபற்றிய மசோதா இரண்டு ஆண்டுகளுக்கு முன்னமேயே இந்த மன்றத்தில் நிறைவேறியிருந்தும் இதுகாறும் ஒரு செயல்கூட இதன் அடிப்படையில் செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்னவோ ?

[1st November 1962

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : செயல்படாமல் இருக்கவில்லை. எற்கனவே முனிசிபாலிடிகளிலிருந்து ரிபோர்ட் அனுப்பப்பட்டிருக்கிறது. கரஸ்பாண்டன்சில் தாமதமாகிறது. சீக்கிரமாக துரிதப்படுத்த முயற்சிக்கிறோம்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicats revision by the Member..]

II. ANNOUNCEMENTS.

(1) MESSAGES FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Madras Legislative Assembly, transmitting a copy of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 15 of 1962), as passed by the Assembly on the 29th October 1962 for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have also received a message from the Hon. Speaker, Madras Legislative Assembly, transmitting a copy of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1962 (L.A. Bill No. 17 of 1962) as passed by the Assembly on the 31st October 1962 for the concurrence of the Council.

(2) MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have also received a message from the Governor of Madras recommending to the Legislative Council the consideration of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1962.

III.—CALLING ATTENTION TO THE RESIGNATION OF THE MEMBERS OF THE KANYAMBADI PANCHAYAT.

* டாக்டர் அ. சிதம்பரநாதன் : தலைவர் அவர்களே, நம்முடைய மன்றத்தின் விதிகளில், 42-ஆவது (1) விதியின் கீழே நான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன். வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கண்ணியம்பாடி பஞ்சாயத்து போர்டு உறுப்பினர்களெல்லாம் அண்மையில் ஏகமனதாக தங்களுடைய பதவிகளிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ராஜீனமா செய்ததற்குக் காரணம் என்று பத்திரிகைகள் வாயிலாக அறிவிப்பு வந்தது உண்மையானால் உயர்தரப் பள்ளிக்கூடம் தங்கள் ஊரிலே நிறுவப்படவேண்டும் என்று கேட்டதை அரசாங்கம் ஒத்துக் கொள்ளாததே காரணம் என்று தோன்றுகிறது. அதைப்பற்றி அறிவதற்காகவே இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம்.